gistered No. M 2095.

15 JUN 1926

# ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம் முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.


| தொகுதி 16 | 1926-ஆம் ஜூன்-மீ 11உ | பகுதி 12. |
| --- | --- | --- |


பொருளடக்கம்.


1. பாரதஸமாஜம் நித்திய பூஜை C. ராமய்யா. ...325
2. அடியார் சேஷத்திர மான்மியம்—C. ராமய்யா (பத்திராதிபர் மொழி பெயர்ப்பு) ...333
3. மஹரிஷி ஒருவர் பிரம்மஞான சபையோருக்கு அனுப்பிய செய்தி(மொழிபெயர்ப்பு) P. R. சுந்தரராஜமய்யர். ...335
4. மரணம்— ... சலம் பிள்ளை. ...342
5. ... ஸ்திரமும் உபதேசமும் ... அய்யர். ...345

...347

...348

## நமது சந்தாநேயர்களுக்கு விசேஷ அறிவிப்பு.

ஞானோதயம் 16-வது தொகுதி இத்துடன் முடிவடைகிறது. அடுத்த 17-வது தொகுதிக்கு, அதாவது 1926-ம் வருஷம் ஜூலை மீ முதல் 1927-ம் வருஷம் ஜூன் முடிய உள்ள வருஷ சந்தாவாகிய ரூ 1-யும் தயவுசெய்து உடனே மணியார்டர் செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். நாங்கள் வி. பி. யில் பத்திரிகை அனுப்பும் ஏற்பாடு வைத்துக்கொள்ளவில்லை. அப்படிச்செய்தால் எந்தக் காரணத்தினாலாவது வி. பி. பெற்றுக்கொள்ளப்படாவிட்டால் எங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. பெற்றுக்கொள்ளும் சந்தாதாரர்களுக்கும் அணா 2 அதிகச்செலவு ஆகிறது. ஆகையால் சந்தாதாரர்கள் மணியார்டர் அனுப்பிவிடுவதே உத்தமமாகும். அதற்காக இத்துடன் மணியார்டர் பாரம் வைத்திருக்கிறோம். அதில் தெளிவான
விலாஸம் எழுதி மணியா[illegible] விட்டால்
பெரிய உபகாரமும் [illegible] ய்
கள் என்று அ[illegible]
அநுசரி[illegible]



## நேயர்களுக்கு விக்ஞாபனம்.

எல்லாம் வல்ல மஹான்களின் திருவருளால் நம் ஞானோதயப் பத்திரிகைக்கு 16-ம் ஆண்டு இத்துடன் முடிவடைந்து, அடுத்த ஜூலை மீ-ல் 17-வது வருஷம் ஆரம்பமாகிறது. இக்கைங்கரியத்தில் முதலில் என்னைத் தூண்டி எனக்கு உத்ஸாகமளித்த என் அருமைச்சகோதரர்களுக்கும், பின்னர் இப்பத்திரிகையை அதிகமாய்ப் பரவச்செய்வதற்குப் பல சந்தாதாரர்களைச் சேர்த்து உதவிய என் அன்பார்ந்த நண்பர்களுக்கும், இதை விசேஷ ஆர்வத்துடன் வரவேற்று ஆதரித்த நம் சந்தா நேயர்களுக்கும், வித்யாதானமளித்த பேருபகாரிகளாம் அன்பர்களுக்கும், பொதுவாய் இப்பத்திரிகையிலுள்ள குற்றங்குறைகளைப் பொறுத்து அவற்றைப்பொருட்படுத்தாது இதன் அபிவிர்த்தியிலமட்டும் நாட்டம் வைத்து அதற்கான யோஜனைகளை எனக்கு அடிக்கடி தந்துதவிய அபிமானிகளுக்கும் நான் என் மனமார்ந்த வந்தனங்களை அளிக்கின்றேன். இத்தகைய பேராதரவும் அநுதாபமும் நிறைந்த நண்பர்களின் சகாயமின்றி நான் மட்டும் தனியே இக்கைங்கரியத்தைச்செய்ய எங்ஙனம் சாத்தியமாகும்? இந்த வருஷத்தில் அவர்கள் காட்டிய அன்பும் அநுதாபமும் நிறைந்த உதவிகளால் நான் இக்கைங்கரியத்தை இன்னும் அதிகமான உத்ஸாகத்துடன் புரிந்துவர சக்தியளிக்கப் பெற்றிருக்கின்றேன். அவர்களது நிரந்தரமான பேருபகாரங்கள் இப்பத்திரிகைக்கு எப்பொழுதும் ஊற்றுக்கண்போல் பெருகி வந்துகொண்டிருக்குமென்பது நான் சந்தேகமறத்தெளிந்த விஷயமாதலால் இது இன்னும் வெகுதூரம் பரவிப்பலரும் விரும்பி வாசித்துப் பயனடையுமாறு வர வர அதிக மதிகமான உத்ஸாகத்துடனும் சிறப்புடனும் நடத்தப்படுமென்பதை நான் கூறவும் வேண்டுமோ? ஸர்வலோக சரண்யராகிய ஸ்ரீபகவான் மார்க்கண்டேயருக்கு வரமளித்து ரக்ஷித்ததுபோல் 16 வயது அடைந்த நம் ஞானோதயத்தையும் அநுக்ரஹிப்பாராக. சுபம்.

பத்திராதிபர்.

# ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம் முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

| தொகுதி 16 | 1926-ஞு ஜூன்-மீ 11உ | பகுதி 12. |
|---|---|---|

உ

ஐயனே யுனை யன்றி யொருதெய்வங்
கையினாற்றொழ வுங்கரு தேன் கண்டாய்
பொய்ய னாகிலும் பொய்யுரையேன் சுத்த
மெய்யனு முனக்கே வெளி யாகுமே.
வெளியி னின்ற வெளியாய் விளங்கிய
வொளியி னின்ற வொளியாமுன் றன்னைநான்
றெளிவு தந்த கல்லாலடித்தே வென்று
களி பொருந்தவன்றோ கற்ற கல்வியே.

## *பாரத ஸமாஜம்.

## நித்திய பூஜை.

பாரத ஸமாஜத்தாரால் அடையார் க்ஷேத்திரத்தில் நிர்மாணஞ்செய்யப்பட்ட ஹிந்து தேவாலயம், கடந்த டிஸம்பர் மாதம் 21-ம் தேதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும், அந்நாள் முதல் பிரதிதினம் உதயம் 6-30 மணிக்குச்சரியாய்த்

* தெலுங்கு திவ்யஞானதீபிகையினின்றும் பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.

…ப்பக நூலகம்
210804



துவக்கி பூஜை நிகழ்ந்துவருவதாயும் இதைப் படிப்பவர்களுக்கு இங்காறும் தெரிவித்திருக்கிறோம். அப்பூஜை நிகழும் காலத்தில் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டம்மையார் அவர்களும், ஸ்ரீமான் யோகி லெட்பீட்டரவர்களும், ஸ்ரீமான் ஜினராஜதாஸரவர்களும் சூக்ஷ்ம திருஷ்டியுடன் பரிசீலித்து, அவர்களுக்குக் கோசரமான சூக்ஷ்ம விஷயங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அப்பூஜாமுறையையும், பூஜாகாலத்தில் உபாஸகர்களின் ஸமஷ்டி பக்தி சிரத்தைகளை யனுசரித்தும், சங்கற்ப சக்தியை யனுசரித்தும், அவர்களின் மனோ நிச்சயங்களையும் மனோ பாவங்களையும் அனுசரித்தும், ஊர்த்துவ லோகங்களில் உண்டாகும் பலனை இங்கு கீழ் தெரிவிக்க மேற்கொண்டேன்.

முதல் முதல் இங்கு நடத்தப்படும் பூஜா கிரமத்திற்கும் சாமான்யமாய் ஹிந்து வீடுகளில் ஆகட்டும், தேவாலயங்களிலாகட்டும் நடத்தப்பட்டுவரும் பூஜா முறைக்கும் உள்ள மூன்று இரண்டு தாரதம்யங்களை இங்கு எடுத்துக்காட்டுகிறேன்.

1. அங்கு நிகழும் பூஜை ஒருவர் மாத்திரமே செய்வார். ஒவ்வொருவரும் பிரத்யேகமாய் பூஜை செய்வார்கள். அர்ச்சனை செய்யும்பொழுது உபாசகன் பக்தி சிரத்தைகளோடு பக்தியை அநுஷ்டிக்கினும், அது ஒருவரைப்பற்றியதே. பூஜை முடிவிலேயே பிரசாதத்தையும், தீர்த்தத்தையும் மற்றவர்களெல்லோரும் ஸ்வீகரிப்பார்களல்லவா? அம்முறையில், பூஜிப்பவனுடைய பக்தியால் ஈசுவரானுக்கிரகத்தை அவர்கள் பெற்று, அதை பக்தர்களுக்கு பங்கிட்டு வைப்பதே முக்கிய பாவம். மொத்தத்தில், பிரத்தியக்ஷமாக பூஜை செய்யும் எஜமானன் அல்லது அர்ச்சகனாகட்டும், அல்லது சமீபத்திலுள்ள பக்தர்களாகட்டும் தங்களுக்கு ஈசுவரானுக்கிரத்தை பெறவேண்டும் என்றும், தாங்கள் பரிசுத்தர்கள் ஆகவேண்டும் என்றும் உள்ள முக்கியபாவமாக இருக்கின்றது.



இப்பொழுது பாரத ஸமாஜ ஹிந்து ஆலயத்தில் நிகழும் அர்ச்சனையில் புதுபாவனை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. பிரத்தியக்ஷமாய் பூஜை செய்வதற்கு உட்காரும் "அத்வர்யு" வும், சமீபத்தில் உட்காரும் "எல்லோரும்" ஏகபாவத்துடன் சமுதாயமாக ஓரே கோஷ்டியாய் பூஜையில் மேற்கொள்ளுவார்கள். சில மந்திரங்களை அத்வர்யுமாத்திரம் உச்சரிப்பார். சிலவற்றை அவருடன் கலந்து சகலரும் நல்ல ஸ்வரத்துடன் சொல்லுவார்கள். பிரதி மந்திரத்தையும் உச்சரிக்கும் காலத்தில் அந்த மந்திரத்தின் அர்த்தத்தையும், அதனின்று த்வனிக்கக்கூடிய பாவனைகளை ஏகாக்கிரமாக சகலரும் பாவித்துக்கொண்டு, அதின் வினியோகத்தை அதாவது அதின் உச்சாரணத்தாலும், அதன் அங்கமாகிய கிரியையாலும் உண்டாகவேண்டுமென உத்தேசிக்கப்படும் பலத்தையும் ஸ்பஷ்டமாய்பாவித்து சங்கற்பிப்பார்கள். "யத்பாவம் தத்பவதி" எனும் ஸநாதன தர்மானுஸாரமாக உத்தேசித்த பலம் சித்திக்கும். இவ்விஷயத்தை மீளவும் பூஜா விபரத்தை எழுதும்பொழுது விஸ்தாரமாய் எழுதுகிறேன்.

2 பூர்வகாலத்திய பூஜா முறைமையில் பகவானுக்கு தியான ஆவாஹனாதிஷோடச உபசாரங்களை அற்பித்தல், ராஜ உபசார பக்தி உபசாரங்களை அளிப்பதும், அவைகளால் பகவான் பிரீதி உடையவராகி இஷ்டார்த்தங்களை அனுக்கிரஹிக்க வேண்டுமென கோருவதும் முக்கியாம்சங்கள். பிரஸன்னராக வேண்டியதற்காக தியானித்தல், அர்க்கியம், பாத்தியம், ஸ்நானம், வஸ்திரம், கந்தம், புஷ்பங்கள், தூபதீப நிவேதனங்கள், புஷ்பாஞ்சலிகள், நிர்த்திய கீதங்கள் முதலாயுள்ள மானஸிகமாய் அசுவாரோகண, கஜாரோகண, ஆந்தோளிகாரோகண, ராஜ உபசாரங்களும், பிரதக்ஷிண நமஸ்காராதி பக்தி உபசாரங்களாலே பகவானை திருப்திசெய்தல் முக்கியமாயுள்ள பாவங்கள். இங்கு பூஜையில் ஆரம்பத்திலிருந்து முடிவுவரைக்கும் பாவனைகளே வேறு. பூஜிப்பவர்களில் ஒவ்வொருவரும், தன் சொரூபத்தையும், பரமாத்மாவின் சொரூபத்தையும் தியானித்துக்கொண்டு,

தன்னிடமுள்ள லோபங்களையும், மலங்களையும் தெரிந்து கொண்டு, அவைகளை விலக்கிக்கொண்டு ஈசுவரத்தன்மையை அடைவதற்கு எத்தனிப்பதும், மேலும் சகலரும் கலந்து செய்யும் பக்தி ஞான மனோ நிச்சய முதலிய ரூபங்களாயுள்ள பாவங்களின் மூலத்தில் பகவானுடையவும், அவருடைய ஆக்ஞையின்படி நடக்கும் தேவர்களுடையவும், ரிஷிகளுடையவும், அனுக்கிரஹம் பிரவாகரூபமாய் உலகத்திற்குச் செல்லச்செய்வதும், இவைகளே முக்கிய பாவங்கள்.

ஒவ்வொருவரும் பிரத்தியேகமாய் பக்தியை அனுஷ்டிக்கும்பொழுது ஈசுவரானுக்கிரஹம் அவரவர்பேரில் வர்ஷிக்கும் என்பதில் சந்தேகமில்லை. அந்த பக்தன் ஸ்வப்பிரயோஜனமுடையவனாகாமல் பரப்பிரயோஜனமுடையவனாக இருக்கின், அந்த பிரஸாத பிரவாஹத்தை உலகத்திற்கு பங்கிட்டு வைப்பான். ஆனால் ஒவ்வொரு பக்தன் பிரத்தியேகமாக அடையக்கூடிய பிரஸாதத்தை யெல்லாம் சேர்க்கினும் அதற்கும், எல்லோரும் கலந்து சமுதாயமாக ஒரேபாவத்தோடு மனோபாவங்களை சேர்த்துச்செய்யும் பூஜையால் உண்டாகும் பிரஸாதத்திற்கும் வெகு பேதமுண்டு. ஆயிரம் நூல் இழைகள் வெவ்வேறாக உபயோகிக்கின் அதன் பலன் எல்லாம் கலந்து எம்மாத்திரமிருக்குமோ, அவ்வாயிரம் நூல் எழைகளை ஒன்றாகத்திரித்து கயிறாகச்செய்யின் அதை உபயோகிப்பதினால் எவ்வளவு பலமுளதோ அவ்வளவு தாரதம்மியம் உளது. "சங்கேசக்தி: கலௌயுகே" என்ற நியாயப்படி இந்த பாரமார்த்திக விஷயத்திலும் அனேகர் கலந்துசெய்யும் பக்தி ஆராதனங்களினின்று உலகத்திற்கு ப்ரவஹிக்கக்கூடிய நன்மை மிகவும் அதிகமாகும்.

மேலும் ஒவ்வொரு சங்கற்பமும் எண்ணமும் சூக்ஷ்மலோகத்தில் சூக்ஷ்ம பிரகிருதியினிடம் ரூபத்தைத் தரிக்குமென்பதாகவும், அந்தந்த சங்கற்பத்தின் சுபாவத்தை ஒட்டியும் அதனுடைய பலம் நிர்மலத்வம் இவைகளை அனுசரித்தும், அந்த சங்கற்பரூபம் தீர்க்க காலத்தையும், வீர்யத்தையும், விசேஷ பலத்தையும் அளிக்கக்கூடியதாகுமென



பிரம்மஞானசபை கிரந்தங்களில் அனேக இடங்களில் வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வித சமுதாய அர்ச்சனையில் ஒரு விதமான சங்கற்ப ரூபம் உத்பத்தி ஆகும் என்பதாகவும், அது யோக திருஷ்டிககுக்கோசரமாகுமென்பதாகவும் ஸ்ரீமான் லெட்பீட்டர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஸாமான்யமாய் அந்தந்த மதஸ்தர்கள் அமைத்துள்ள தேவாலயங்கள் அந்தந்த மத சம்பிரதாய பூஜாகாலங்களில் உத்தமோத்தமர்களான ஞானிகள் பக்தர்கள் செய்யும் சங்கற்பங்களை தரிக்கும் ரூபங்களுக்கு அனுகுணமாக இருக்கின்றன. கிறிஸ்தவ ஆலயத்தின் வெளி ரூபம், அதில் நடத்தப்படும் அர்ச்சனையால் உண்டாகும் சங்கற்ப ரூபமும் சற்றேறக்குறைய ஒத்தே இருக்குமென்பதாக இதுவரையில் ஸ்ரீமான் லெட்பீட்டர் அவர்கள் எழுதியுள்ள கிரந்தங்களில் நிரூபித்திருக்கிறார்கள். இப்பொழுது அவர் அடையார் ஹிந்து ஆலயத்தில் நிகழ்ந்த பூஜையை பரிசீலித்துப் பார்த்தபொழுது அவருடைய சூக்ஷ்ம திருஷ்டிக்குப் புலப்பட்ட சங்கற்பரூபம் வட இந்தியாவில் கங்காதீரத்திலுள்ள ஆலயங்களின் ரூபத்தை ஒத்திருந்தது.

அந்த சங்கற்ப ரூபத்தின் துவாரா பரமேசுவர அனுக்கிரக அமுர்தம் அங்கு ஆலயத்தில் பக்தர்களுக்கும், அக்கம் பக்கம் இடங்களுக்கும் பிரவஹிக்கும். பூஜிப்பவர்கள் எவ்வளவு திடமாகவும், தெளிவாகவும், பாவங்களையும், சங்கற்பங்களையும், மனோ நிச்சயம் முதலியவைகளையும் பாவிப்பார்களோ, அவ்வளவு தெளிவும், உறுதியும், வீர்யமும், உள்ளதுமான சங்கற்பரூபம் உற்பத்தியாகும். ஆலயத்தில் பூஜைகள் நிரந்தரமாய் நடந்துகொண்டு, பூஜை செய்பவர்களின் மனோபாவங்கள் பரிசுத்த முள்ளவைகளாயும், தெளிவுள்ளவைகளாயும், திடமுள்ளவையாயும் இருக்கின், இந்த சூக்ஷ்ம சங்கற்ப ரூபம் அங்கு நின்று தங்கி சாசுவதமாயிருக்கும். அக்காரணம் பற்றி, அந்த ஆலயத்திற்கு வருபவர்களுக்கு எப்பொழுதும்— பூஜை நடக்கும்பொழுதும்,

ஏனைய காலங்களிலும்—அந்த பரமேசுவர பிரஸாதம் லபித்துக்கொண்டிருக்கும். சாமானிய ஜனங்களுக்குக்கூட அங்கு சென்றவுடன் கொஞ்சம் பக்தியும் மனோ சாந்தியும் உண்டாகும்.

இக்காலத்தில் வெகுவாக பூஜைகள் செய்யும் அர்ச்சகர்களிடம் பக்தி குறைந்து வருவதைப்பற்றியும், ஆலயங்களுக்குச்செல்லும் பக்தர்களுக்குக்கூட தெளிவாயுள்ள பாவனைகள் இல்லாது போவதைப்பற்றியும், பூஜிப்பவர்கள் பிரத்தியேகம் பிரத்தியேகமாகச்செய்யும் பூஜைகளில் "சங்கசக்தி" இல்லாதுபோவதாலும், இவ்வித ஸூக்ஷ்ம ஆலயம் இல்லாதுபோகுதல் ஏற்பட்டு தேவாலயத்திற்கு வருபவர்களுக்கு பக்தியும் மனோசாந்தியும் அவ்வளவு விசேஷமாக உண்டாவதில்லை.

இந்த ஸந்தர்ப்பத்தில் மற்றொருவிஷயம் வெகு முக்கியமாய் கவனிக்கவேண்டியிருக்கிறது. மனிதனுக்கே ஆகட்டும், ஆலயத்திற்கே ஆகட்டும், உட்புறம்பான சுத்திகேவலம் அவசியம். அர்ச்சகர்களுடையவும், யாத்திரைக்காரர்களுடையவும், பக்தி, சிரத்தைகளாலும், அவர்களுடைய மிகவும் தெளிவான பாவனைகளாலும், அவர்களிடம் புதைந்துள்ள "கிரியாசக்தியை" ஞானத்துடன் உபயோகிப்பதாலும், கொஞ்சமட்டில் இந்த உள்சுத்தி உண்டாகும். அர்ச்சகர்களும் யாத்திரைக்காரர்களும் பரிசுத்த மனதோடும் பக்தியோடும் பகவானை ஆராதிக்கும் பிரதேசங்களில், அவர்களின் பக்தி சிரத்தைகள் மகான்களான ருஷிகளுடையவும், தேவர்களுடையவும் கடாக்ஷத்தை ஆகர்ஷிக்கும். அப்பொழுது அவர்கள் ஈடுபட்டு, இந்த சங்கற்பரூபத்தை அவரது அனுக்கிரகத்துடன்கூட நிரப்புவார்கள். அவ்வித மகான்களின் அனுக்கிரகத்தினாலே அன்றோ, சிலநதிகளும், பிரதேசங்களும், தீர்த்தங்களென்றும், புண்ணிய க்ஷேத்திரங்களென்றும் பிரஸித்தி அடைந்தன. இவர்களைக்குறித்து ஸ்ரீமத்பாகவதத்தில் "தீர்த்தீகரோதி தீர்த்தானி" அதாவது தீர்த்தங்களை, அவ்வித பவித்திரதீர்த்தங்களாக செய்பவர் என்றதாக சொல்லப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் தேவாலயத்தின்,



அல்லது தீர்த்த க்ஷேத்திரங்களின் உள் சுத்தியைக்காட்டும். ஆனால் அங்கு எப்பொழுதுமுள்ள அர்ச்சகர்களும், இதர ஸேவகர்களும், கேவலம் ஸ்வப்பிரயோஜனமுள்ளவர்களாகி, வந்த யாத்திரைவாஸிகளிடம் எவ்வளவு விசேஷதிரவியத்தையும் லாபத்தையும் அடையலாமெனும் ஒரே சங்கற்பத்தோடு இருப்பவர்களாக இருக்கின், அந்த அந்தரங்க சுத்தியும் நாசமாகும்.

அந்தரங்க சுத்தியுடன் வெளிப்படையான சுத்தியும் கேவலம் அவசியம். இக்காலததில் அனேகர், அந்தக்கரணசுத்தி முக்கியமே ஒழிய வெளிப்படையாய் எவ்விதமிருக்கினும் குறைவில்லை என்பதாக எண்ணிக்கொண்டு, தங்கள் சரீரசுத்தி விஷயத்திலாகட்டும், தாங்கள் தரிக்கும் வஸ்திர விஷயத்திலாகட்டும், பூஜா வீடு ஆலய விஷயங்களிலாகட்டும், எவ்வளவு அழுக்கு கசுமலம் சேர்ந்திருந்தாலும், அவைகளை கவனிக்க வேண்டிய அக்கறை இல்லை என்பதாக உபேட்சைசெய்துவருகிறார்கள். ஸ்நானத்தில்தேகமெல்லாம் முழுமையும் நனைந்ததா என பார்ப்பார்களே ஒழிய, உடம்பினில் அழுக்கு எல்லாம் பூர்த்தியாக நீங்கிற்றா என்றுபார்த்தல் அரிதாகிவிட்டது. சீயக்காய், பயத்தமாவு, ஸோப்பு, முதலியவைகளை உபயோகித்து தேகமுழுமையும் பாதமுதல் உச்சிபரியந்தம் சுத்திசெய்தல் கேவலம் இகலோகத்தாரின் மார்க்கமென்றும், அவற்றை உபேக்ஷித்து அக்காலமெல்லாவற்றையுங்கூட ஜபதபங்களிலேயே வினியோகித்தலே பாரமார்த்திகனுடைய தர்மமெனவும் எண்ணுகிறார்கள். ஸ்நானம் செய்தமுடிவில் "மடி வேஷ்டி" கட்டிக்கொள்ள வேண்டுமெனவும், அந்தமடிவேஷ்டியை ஜலத்தில் நனைத்து காயப்போட்டால் போதுமெனவும் நினைப்பார்களே ஒழிய, அது பார்ப்பதற்குக்கூட நிர்மலமாய், பரிசுத்தமாய் இருக்கவேண்டுமென நினைப்பதில்லை. வேஷ்டி அழுக்காக இருக்கிறதே என்று சொல்லின் "மடி வேஷ்டி அன்றா!" என ஸமாதானம் சொல்லுவார்கள்.

மனிதன் மாத்திரமாயுள்ள ஒரு அதிகாரியிடம் போகும்பொழுது சரீர, வஸ்திர நிர்மலத்தை கவனிப்பார்களே ஒழிய

மகான்களாயுள்ள குருதேவர்களிடம் அவ்வளவு நிர்மலத்தை கவனிப்பதுஇல்லை. பகவத்சன்னிதானத்திலும் அந்தவார்த்தையை எண்ணுவதே இல்லை. இவ்விஷயத்திலுங்கூட ஒரு ரகஸ்யம் கவனிக்கவேண்டியிருக்கிறது. பிரதி ஸ்தூலவஸ்துவை யொட்டி, சுத்தி, ஒரு அதிருஸ்யமான தேஜஸ் இருக்கின்றது. அந்தத்தேஜஸைப்பற்றியே அந்த வஸ்துக்கள் சுத்தமுள்ளவைகள், மலினமுள்ளவைகள், ஸாத்வீகமுள்ளவைகள், ராஜஸீகமுள்ளவைகள், எனும்பாகுபாடுகள் ஏற்படும். உடம்பிலாகட்டும், வேஷ்டிகளிலாகட்டும், வீடுமுதலியவைகளிலாகட்டும், தேவாலயங்களில் உள்ளும்—புறம்பும் சுற்றுப்பக்கங்களிலும்—ஆகட்டும் அழுக்கு இருக்கின், அத்துடன்கூட அதிருச்யமாக அசுத்த தேஜஸ் வியாபித்தே இருக்கும். அப்படிப்பட்டவர்களாகட்டும், அவ்வித பிரதேசங்களிலாகட்டும், எவ்வளவுபக்தியை அனுஷ்டிக்கின், அந்த பக்தியால் உண்டாகும் அந்தரங்க சுத்த தேஜஸ், இந்த மாலின்னிய சம்பந்தமான அசுத்த தேஜஸுடன் கலந்து கெட்டுப்போகும். ஆனதுபற்றி அந்தரங்க சுத்தியை மாத்திரம் கவனித்து பாஹ்ய சுத்தி இல்லாவிடின், அது பவித்திரமாயுள்ள கங்காஜலத்தை மலங்களை எடுக்கும் தோட்டியின் பாத்திரத்தில் ஊற்றினதுபோல் ஆகுமென ஒரு மகான் எழுதிஉள்ளார். தேவாலயத்தில் முக்கியமாய் இவ்விஷயம் மிக்கவாறு கவனிக்கவேண்டியிருக்கின்றது. எந்த ஆலயத்தைப்பார்க்கினும், முற்றிலும் நாற்றமடித்துக் கொண்டிருக்கும் தொட்டி தீர்த்தம், அழுகிக்கொண்டிருக்கும், "நிர்மாலியம்" ஸ்வாமிக்கு ஆராதித்து பிரஸாத ரூபமான பலங்களைப் பெற்றுக்கொண்டு அப்பால் அதன் தோல் ஓடு முதலியவைகளை நாலாபக்கங்களிலும் போட்டு எல்லோரும் மிதித்துக்கொண்டிருத்தல், இத்துடன் கூட சில ஆலயங்களில் பசுக்கள் திரிந்துகொண்டு அவைகள் செய்யும் கசுமலங்கள், சுவர்கள் ஸ்தம்பங்கள் எண்ணெசிக்குடன் மூடப்பட்டிருத்தல், இவை எல்லாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள். ஆலயங்களை கட்டினவர்கள், கட்டச்செய்தவர்கள், அவைகளை எவ்வளவோ ரம்மியமாக செய்யவெண்டுமென எவ்வளவோ சிரத்தையோடு சிரமம் சிலவுகளைபாராட்



டாமல், விசேஷ சித்திர சிற்ப விநோதங்களாலே அவைகளை அமைத்திருக்க, பின்னர் உள்ளவர்கள் அக்ஞானத்தால் சிறிதும், மூடபாவத்தால் சிறிதும், சிரத்தைக்குறைவால் சிறிதும் இந்த ஆலயங்களை சாரமற்றதாய் செய்துவருகிறார்கள். தேவாலயங்களை பரிசுத்தமாயும் நிர்மலமாயும் வைத்தல், அதில் உபயோகிக்கும் உபகரணங்கள் எல்லாம், அகண்ட தீபத்தில் தீபத்தின் அழுக்குகளில்லாமல் ஸ்தம்பங்கூட, நிர்மலமாக வைத்தல் மிகவும் முக்கியம்.

ஆலயங்களின் தர்ம கர்த்தாக்களும், அங்கு செல்லும் பக்தர்களும், அங்குள்ள அர்ச்சக சேவகர்களும், ஆஸ்திகர்களான எல்லோரும் இவ்விஷயத்தில் சிரத்தைவகித்து, தேவாலயங்களின் ஸம்ஸ்காரத்தை கவனிப்பார்களாக.

இவ்விஷயத்தை இம்மட்டோடு நிறுத்தி பூஜா விதானத்தைக்குறித்து பின்னர் எழுதுகிறேன்.

C. ராமய்யா.

---

## அடையார் க்ஷேத்திர மான்மியம்.

323-வது பக்கத் தொடர்ச்சி.

சூதசம்ஹிதையில், "பிரபஞ்சத்திலுள்ள மதங்களெல்லாம் பரமேசுவரனிடமிருந்தே வந்தவைகள்; ஒரு மதஸ்தர் இன்னொரு மதஸ்தரை திரஸ்காரம் செய்யக்கூடாது." என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஞானவான்கள் தர்க்கவாதத்தோடு இம்மார்க்கங்களைக் கண்டனம்செய்யப்படாதென்றும் இருக்கின்றது. மேலும் அதே கிரந்தத்தில் ஸகலநதிகளும் முடிவில் ஸமுத்திரத்தினிடம்எவ்விதம் பிரவேசிக்குமோ அவ்விதமே லோகத்திலுள்ள பின்ன மதங்களுக்கெல்லாம் பரமேசுவரனே புகலிடமென்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த சூதசம்ஹித பிரமாணத்தை அனுசரிப்பது அடையார் க்ஷேத்திரம் தவிர வேறு எங்கும் எனக்குத்தெரிந்

தவரையில் காணப்படவில்லை. ஆசரணையில்லாத படிப்பினால் பிரயோஜனமென்ன? ஆசரணையில்லாத வித்தை வியர்த்தமென்பதற்கு சம்சயமில்லை.

இந்த அடையார் க்ஷேத்திரத்திற்கு வந்தவர்களுக்கெல்லாம் முக்கியமாக போதித்தல், ஸ்வலாபதியாகமே. "மனோவாக்காயங்களால் எதைச்செய்யினும், ஸ்வலாபத்திற்கல்லாமல் பரமார்த்தத்திற்கே செய்யவேண்டும்" என்பதாக ஹிருதயத்தில் ஊன்றும்படி செய்வார்கள். பரமார்த்தமெனில், ஈசுவரப்ரீதி. ஈசுவரனே ஜகத்தாகப்பரிணமித்து இருப்பதுபற்றி, ஜகத்திற்கு பிரீதியுண்டாகச்செய்தல் ஈசுவரப்ரீதி.

எப்பொழுது ஸ்வலாபத்தியாகமுண்டாகுமோ, அப்பொழுதே ஸமஸ்தபாபங்களும் நாசமாகும். ஸமஸ்த தீர்த்தயாத்திரைகளின் பலன் இதைவிட வேறன்று.

இந்த க்ஷேத்திரவாசிகள் அநேகம்பேர் ஸ்வலாபதியாகம் அடைந்து, பரமார்த்த காரியங்களையே செய்பவர்கள். அனேகம்பெயர்கள் எவ்வித பிரதிபலனும், அதாவது சம்பளமாகட்டும், மேலும் வேறு எந்தவிதமான இலாபமாகட்டும் அபேக்ஷியாமல் தமது சொந்த திரவியத்தால் ஜீவனம் செய்துகொண்டு, பிரம்மஞானஸபையின் வேலைகளைச்செய்து வருகிறார்கள். மற்றுஞ்சிலர், தமக்குள்ள விசேஷ சம்பளத்தையும், பதவியையும் அதிகாரத்தையும் விட்டொழித்து, ஜீவனத்திற்கு மாத்திரம் ஸ்வல்ப திரவியத்தைப் பெற்றுக்கொண்டு பாடுபடுகிறார்கள்.

இந்த அடையார் க்ஷேத்திரத்திற்கு வந்து, உபந்யாசங்களைக் கேட்டு, பூஜைகளை நடத்தி, ஸாதுஜன சங்கத்தினின்று மஹான்களின் அனுக்ரஹ சக்தியைக் கைக்கொண்டு சென்றவர்கள் வேறு தீர்த்தயாத்திரை செய்யவேண்டிய அவசியமேயிராது. அவர்களுக்கு சரீரம் காசிக்ஷேத்ரமாகவும், ஞானம் மூவுலகங்களையும் பவித்திரமாகச்செய்யும் தாயான கங்கையாகவும், சிரத்தாபக்திகள் கயாவாகவும், ஸ்ரீ குரு



சரணத்யானம் பிரயாகையாகவும், துரியாவஸ்தை விசுவேசுவராகவும், ஸர்வபூத மனோசாக்ஷியாக இருக்கும் அந்தராத்மாவை பரமேசுவரனாகவும் எண்ணுபவர்களுக்கு இதரக்ஷேத்ரங்களால் பிரயோஜனமென்ன?

இதுவுமன்றி, அடையார் க்ஷேத்ரயாத்திரைக்கு வந்தவர்கள் பிரம்மவிசாரபராளாயிருப்பதனால், எல்லாக்கர்மங்களையும் செய்தவர்களாக கெணிக்கக்கூடும். பரமார்த்த விசாரமுள்ளவர்களுக்கு அடையார்க்ஷேத்ரம் மிகுந்த உதவியைச் செய்யுமென்பதற்கு சந்தேகமில்லை.

ஜெ. ஸ்ரீநிவாஸராவ்.

---

## மஹரிஷி ஒருவர் பிரமஞானசபையோருக்கு அனுப்பிய செய்தி.

296—வது பக்கம் துடர்ச்சி

ஆகலின் நமக்கு வேறான அபிப்பிராயமுடையவர்களைக்காணின் அவரை மதிப்புடன் போற்றல்வேண்டும். இச்சபையினுள் சகோதரபாவமென்பது, இப்பொழுதே ஜாதி மதம் ஆண் பெண், வெண்மை கருமையாம் வர்ணங்கள் இவற்றைத்தாண்டி நிற்பதுபோலவே, பல அபிப்பிராயபேதங்களைத்தாண்டி நிற்கும்படி செய்துகொள்ளல்வேண்டும். எப்பொழுதும்போல இச்சபையினங்கத்தினராவதற்கு ஒரு சோதனைதானுண்டு. அது யாதெனில், உயிருடைப்பிராணிகளனந்தமும் ஒரே மூலத்தினின்றும் உற்பத்தியான சகோதரர்களேயென கருத்திற்கொள்ளுதலும், அக்கருத்தைச் சபலமாக்கி, யாவருமறிந்து அனுபவிக்குமாறு விளக்கிவருதலுமாகிய இது ஒன்றேயென்க. உங்களில் பெரும்பான்மையர் அடைந்து நிற்கும் பரிபாகஸ்திதியில், நீங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள் அல்லது கொள்கைகள் யாவையென்பது அத்தனை முக்கியமன்று. பின்னை, அவற்றையெங்ஙனம் கைக்கொள்ளுகிறீர்கள், அதாவது அங்கீகாரம் செய்து அனுபவிக்கிறீர்கள் என்பதுதான் முக்கியமாகும். ஆகவே, ஒருவன் தன்னுடன் இச்சபையில் பிறரும் சமான

யான கொள்கை யல்லது அபிப்பிராயத்தைக் கொள்ளுகின்றனர் இல்லை என்னும் காரணத்தால் இச்சபையை விட்டு வெளியேறவேண்டியது அவசியமாகாது. ஏனெனில், இவ்வித கொள்கைகள் பல இருந்தால், அதனால் இச்சபையும் பெருகி எவ்விஷயங்களையும் பற்றி விவகரிக்கும் தன்மையுடையதாய் அபிவிருத்தி யடைந்துவரும் என்பதிற்றடையில்லை.

ஆனால் ஒருவன் தான் கொள்ளும் நோக்கங்களை அநுபவிக்க விடாமல் அவற்றிற்கு மாறுபட்ட கொள்கையுடைய இதர அங்கத்தினர் கொடுமை புரிவார்களாயின், மேற்கூறிய அவன் சபையினை விட்டு வெளியேறவேண்டியது அவசியமன்றோ! இவ்வித ஆபத்து நேரிடாவண்ணம் இச்சபையிலுள்ளோர் யாவரும் நடந்து கொள்ளுவார்களென்று யாங்கள் எதிர்பார்க்கிறோம். இவ்விதம் நடந்துவருதல் சென்றகாலத்திலும், இனி வருங்காலத்திற்கு மிக விசேடமாய் அவசியமாகின்றது. ஏனெனில், இனி வர வர எங்கள் பிரதிநிதிகளாய் நிற்கும் உங்கள் சபாநாயகி முதலியோர் மூலமாய் நாங்கள் இனி வருங்காலத்தில் அதிகமாக செய்திகளை உலகத்திற்கு அனுப்ப உத்தேசங்கொண்டிருக்கிறோம். இதனால் நாங்களனுப்பும் செய்தியை உங்கள் சபாநாயகிபோன்றவர்கள் அடிக்கடி வெளியுலகத்தில் பிரசித்தப்படுத்தவேண்டி வரும். அப்பொழுது அறிவாளிகள் யாவரும் இவர்களை எங்களது தூதர்கள் அல்லது பிரதிநிதிகளென்றே போற்றுவார்கள். ஆயினும் அவ்விதம் போற்றுமாறு தக்க உள்ளுணர்வு இல்லாத பிறரை நீங்கள் இகழ்தலும் அடாது. நாங்கள் அனுப்பும் செய்திகளை யெல்லாம் உள்ளபடி அறிந்து உணருதற்கு ஏற்றகாலம் அத்தகையினர்க்கு இன்னும் நேரவில்லை யாயினும், இப்பெரும் சபையில் அவர்களும் இருந்து வாழ்ந்துவருவதற்கு தடையிருத்தலு மழகாமோ? இவ்வெங்களது செய்திகளைக்கேட்டு உணர்தற்கேற்ற கடமை கொண்டபின்னரும் அவர்கள் கேளாமல் நிற்பாராயினும் அவர்களைக்கேட்டு உணரும்படி செய்தற்கு அன்பும் ஆதரவும் உதவுமேயன்றி, கொடுமையும் இகழ்ச்சியும் பயன்படுடுமோ?



ஆதலால் அவ்வுயர் விஷயங்களைக்கேட்ட பின்னர் சிற்சிலர் அறிவில்லா வூக்கத்தால் யோசனையின்றி, "இச்சபையில் மெம்பர்களாயிருப்பவர் யாவரும் இந்தல் விஷயங்களை ஒப்புக்கொண்டே தீரல்வேண்டும்," என முறட்டுத்தனமாய் கொடுமை புரிவாராயின், அதனால் நேரிடும் பாவத்திற்கஞ்சி நாங்கள் மென்மேலும், உலகினர்க்கு நற்செய்திகளை வெளியிட்டுவருதலை நிறுத்திவிட வேண்டிவரும். அவ்விதம் சம்பவிக்காதென யாங்கள் நம்புகிறோம். ஆதலால் இச்சபையிலுள் கக்ஷிகள் கொள்கைகளின் வேறுபாட்டை அவலம்பித்து நிற்கும் சம்பரதாய முறைகள் முதலியன ஏற்படாதென நம்புகிறோம். ஆகவே இச்சபையில் எங்கள் மதிப்பிற்குரிய உத்தமர்கள் யாவரெனின், எங்களைப்பற்றி தாம் தாம் கொள்ளும் நினைவுகளின் வித்யாசங்களால் மேற்கூறிய சகோதரபாவம் பாதிக்கப்படாமல் பிறர்களுடன் கலந்து வாழ்பவரேயாவர். இச்சபைக்குள்ள ஒரே ஒரு கருத்தாவது, சகோதர பாவம் என்பதாதலின், அதைக்கொண்டே இச்சபையில் சேருபவர்களையெல்லாம் இச்சபையாகும் வெள்ளிமண்டபத்தில் யாங்கள் செர்த்துக்கொள்கிறோம் என்பது உண்மை.

இக்கருத்தொன்றைவிட்டு வேறு அதிகமாய் எதையும் இச்சபையின் அங்கத்தினர்கள் முழுவதும் பொதுவாய் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று யாங்கள் கேட்கிறதில்லை. ஆனால் இக்கருத்தை ஒப்புக்கொண்டு உள்ளே நுழைகிறவர்கள் தாங்கள் அங்கீகரித்துக் கொண்ட கொள்கையான சகோதரபாவத்தை அழியாது போற்றிவருதலும், தங்களைப்போல் பிறரும் அவ்வித ஸ்வாதீனத்துடன் இச்சபையில் நின்று வாழும்படி நடந்து கொள்ளுதலும், ஞாயமாகுமன்றோ! ஆனதுபற்றி யெவ்வித அபிப்பிராயபேதத்தையும், உண்மைச் சகோதரபாவத்துடன் மரியாதை, ஒழுங்கு, அன்பு, இவைதவறாது யெவ்வளவு உறுதியுடனாயினும் அது காட்டப்படின், நாங்கள் ஒப்புக்கொள்ளுவதற்குத் தயாராயிருக்கிறோம். இவ்வித நம்பிக்கைகள், கருத்துக்கள், முதலியவை ஒன்றிற்கொன்று எவ்வளவு வித்

யாசப்படினும், அவற்றையுடையோர் மற்றவர்களையும் தங்கள் தோழர்களாகக்கருதி அவர்களுடன் ஆக்ஷேபம் தர்க்கம், வாதம், முதலிய செய்தற்கு ஏற்பட்டால் சிறிதும் கெடுதல் என்பது இச்சபைக்குவராது. ஏனெனில் அத்தனை விஸ்தாரமும் யாவற்றையும் தன்னுள் ளடக்கிக்கொள்ளும் சக்தியுடையதுமாய் இந்தச்சபை விளங்குகின்றது. குருக்ஷேத்ரபூமியில் வேறு வேறு இயற்கை, நோக்கம், கருத்துக்களைக்கொண்ட இருதிறத்து சைந்யங்களும் ஒருவரோடொருவர் வித்யாசப்பட்டும், அவசியமானபொழுது அன்புடனும் தருமம் தவறாமலும் ஒருவர்க்கொருவர் கைகலந்து யுத்தம் செய்தார்கள் என்பதை நமது சபையினங்கத்தினர்கள் யாவரும் இன்னுங் கற்றுக்கொள்ளவில்லையா? உருவங்களும் பாஹ்யவேஷங்களும் பலவாறு வேறுபடினும் உண்மையில் சகல ஜீவசமூகமும் ஏகமே யென்பதை யெவரும் மறத்தல் கூடாது.

இனி சென்ற நாட்களினும் அதிகமாய் வெளியுலகத்தவராய நுங்களோடு, நாங்களும் கலந்துறவாடி வெளிப்படையாய் விவகரிக்கப்போகிறோம். ஏனெனில் நீங்கள் எங்களை மறந்துவிட்டாலும், உண்மையில் நாங்களும் மேலே கூறிவந்திருக்கும், சர்வஜீவசகோதரபாவத்தில் அம்சமாய்ச் சேர்ந்தவர்களேயாவோமன்றோ! மானிடருட் சிலர் எவ்விதங் கருதினும் சகோதரபாவமென்பது மனிதசமூகத்தில் மட்டும் பிறந்து அவர்களோடு நின்றுவிடுமோ? காலம் செல்லச் செல்ல நாங்களும் மானிடருட் சேர்ந்தவர்களே என்னுமுண்மை சகலருக்கும் விசதமாகுமென்பது திண்ணம். அவ்விதம்எங்களையும் நுங்களோடு சேர்ப்பித்துக்கொள்ளற்கு நுங்கட்கு, எப்பொழுது பிரீதிஜனிக்குமோ அந் நாள் வரும்வரை நாங்கள் கார்த்திருப்பதற்கு ஏற்ற பொறுமை எங்களுக்குண்டு. ஆகவே நாங்களிருப்பதை நீங்கள் நம்பினாலும் நம்பாவிடினும், இவ்வுலகத்திற்கு நாங்கள் வேண்டிய உழைப்பை, புரிந்துவருதற்கு தடையேதும் இல்லையல்லவா? ஆதலின் நாங்கள் நியமனம் செய்ததும் நீங்கள் அங்கீகரித்து நடத்திவருவதுமான இந்த மகாசபையில், ஜீவன்முக்தர்களான யாங்களும், இப்



பிரபஞ்சத்தில் ஜீவதசையுடன் இருந்து, காலங்கழிக்கிறோம் என்பதை யுக்தியினால் மட்டும் சாதிக்கப்படும் ஓர் விஷயமாய் கொள்ளுவதோடு, பிரத்தியக்ஷமாயும், அனுபவிக்கத்தகுந்த யதார்த்தமான விஷயமாக சகலரும் அங்கீகாரம் செய்யும்படியான ஒருநாள் வரும் என்பது எங்கள் நம்பிக்கை. உங்களுட் சிலர் எங்களை நேரே தரிசனம்பண்ணி இருப்பதால், நிச்சயமாய் எங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களனைவரையும், வெளியுலகினராகிய உங்கட்கு தாம் கண்டதைப்பற்றி உறுதியாய் சாட்சியம் சொல்லும்படி நியமித்திருக்கிறோம். இதனால் நாளடைவில் அதிக மதிகமான பேர்கள், தங்களுக்குள்ள அறியாமையை விலக்கி, யாவரையும் வெளியுலகினராகிய நுங்கட்கு தாம் கண்டதைப்பற்றி உறுதியாய் சாக்ஷியம் சொல்லும்படி நியமித்திருக்கிறோம். இவ்வாறு தாம் கண்ட உண்மையை வெளியில் சொல்லுவோர் ஏற்படுவதால் அதைக் கேள்விப்படும் உலகினர் இவ்வுலகத்தைப் பூர்ணமாய் நேசித்துவருபவரும், தம்மிடமிருக்கும் உயர் சக்திகளடங்கிய பொக்கிஷகிருஹத்தை 'சகோதிரபாவ' மெனும் திறவுகோலைக் கொணர்ந்துவருவோர்க்கெல்லாம் திறந்தளிக்கக் கார்த்திருப்பவருமான பெரியோர்வளை நேரில் தரிசனம் பண்ணுதற்கு இடைஞ்சலாய் நிற்கும் அஞ்ஞானமாகு மூட்டத்தை யகற்றிக்கொள்ளக் கூடுமென்பதுவே எங்கள் நோக்கம். ஆயினும் எங்களது இந் நோக்கத்தை பிறர் அங்கீகரித்துக்கொள்ளத்தான் வேண்டுமென யாங்கள் கட்டாயப்படுத்துகிறதில்லை. எவரெவர்கள் பிறரொடுஞ் சேராது தனியே தத்தம்மட்டில் எங்களைத்தேடி யடைய முயற்சிசெய்யவிச்சைப்படுவார்களோ அவர்களிஷ்டப்படி தாம் கோரியமார்க்கத்தில் தாமே துணையாகத் தனியில் செல்லுதற்குத் தடையில்லை. ஆயினும் இவர்களுக்குங்கூட தாம் தனியே செல்லுதலை நினைந்து அலுப்படைந்து எப்பொழுது பிறரொடுங் கலந்து வாழ்வோம் எனும் பேராவல்கொள்ளும் நாளும் வந்து சேரும் என்பதில் தடையில்லை. எவ்விதமாயினும், எங்களை வேண்டாதவரிடம் நாங்கள் பலாத்காரமாய் சென்றடைவதென்பதில்லவேயில்லை. இனி யிவ்விதமிருத்தலால் இவ்வாதா

வற்ற உலகிற்கு நாங்களில்லாமற்போதல் முடியவேமுடியாது. ஆதலால் எங்களுக்குமட்டும் கொஞ்சம் இவ்வுலகு இடங்கொடுக்குமாயின், வெகு விசேடமாய் அதற்கு வேண்டிய வுதவிகளை நாங்கள் ஈந்தளிக்கக் கூடுமென்பதே யுண்மை.

இனி எங்களது நாதன் இப்பொழுது உலகினில் யாவருமறிய அவதரித்து வியவஹாரம் புரியவேண்டியது ஜகந்நியதியின் ஆக்ஞை. அவரை இக்கோழையுலகம் எப்படி வரவளித்துக்கொண்டாலும் சரி அவர் வந்தேதீரவேண்டியது அவசியமாகின்றது. ஆனால் அவரும் கூட உலகினர் முற்றிலும் வேண்டாமென திக்காரம் செய்வராயின் அதை யலக்ஷியஞ்செய்து உலகில் தங்கி நிற்கமுடியாது. இவ்விதம் அநேக காலங்கட்கு ஒருமுறைதான் உங்கள் மத்தியில் தான் நேரில் வசித்துலாவும் பரமபாக்கியத்தை உங்களுக்கு கொடுக்க அவரால் முடிகின்றது.

இவ்வாறுய காரணங்களால், நாங்கள் யாவரும் உலகினில் பலருமறிய வெளிப்படையாய் வியவஹாரங்களைச் செய்வது எப்பொழுதும் சாத்தியமாகாமல், அதற்கெனசமயங்கள் வருவதை யெதிர்பார்த்து வெகுகாலம் காத்துக்கொண்டிருக்கவேண்டி யிருக்கிறதென்பதை நீங்க ளுணர்ந்துகொள்ளுவீர்கள். அப்படியேயாகுக. இஃதுண்மையேயாயினும், இப்பொழுது வரப்போகும் நாதனுக்கு உலகினரால் அளிக்கப்படும் நல்வரவும் மரியாதையும் முற்காலங்களிற்போலல்லாது இத்தருணத்தில் கொஞ்சம் நீடித்தும், ஒருவேளை வரவர விருத்தியடைந்தும் வருவதுவாய் ஏற்படுமாயின், அவன் கொஞ்சகாலம் அதிகமாகவே நுங்களுடன் வெளியுலகில் தங்கும்படிநேரும். அதனால் நுங்களது வெளியுலகிற்கும் எங்களது அந்தருலகிற்கும், அப்படியே நுங்களது பூவுலகிற்கும் மற்றய சூக்ஷ்ம வுலகங்கட்கும் மத்தியிலுள்ள கதவுகள் முழுமையும் திறக்கப்பட்டு இவ்வுலகம் வேறு உள்ளுலகங்கள் வேறு எனும் இருமை நீங்கி இவையெல்லாம் ஓரேயுலகமாய்விடும் நாள் வந்துசேருமன்றோ! அப்பொழுது நாங்கள் யாவரும் எங்கள் இளைய சகோதரர்களோடு பகிரங்க



மாய்க் கலந்து வாழ்ந்து நுங்கட்கெல்லாம் மூத்தவர்களாய் வியவஹாரம்புரிந்துவாவும் அவ்விதமே மானிடரும் தேவர்களும் நேசமுடைய தோழர்களாய் உறவாடிவசவும் ஆக்க நாட்கள் ஏற்படுவதிற் றடையுமுண்டோ!.

210804

மேற்கூறியவற்றால் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியது யாதெனில், நீங்கள் யாவரும் முழுமனதுடனும் நன்மை, சத்தியம், அழகு இவ் வியற்கையுண்மைகள் எல்லாம் இப்பிரபஞ்சத்தில் முடிவில் ஜயமடைந்து நிலைபெற்றுவிடுமென்பதில் சந்தேஹமில்லையென்று நம்பவேண்டுமென்பதே எண்க. ஆதலின் இவ்விஷயங்களில் நீங்கள் சிரமப்பட்டு உயர்லக்ஷியங்களை யேற்படுத்திக்கொண்டு அவற்றை யிடைவிடாது சிரத்தையுடன் அனுட்டிக்க முயன்றுவரல் வேண்டும். மானிடருள் விரோதபாவம் வேற்றுமை யிவற்றை யுண்டுபண்ணும்தன்மையுடையனவான, பிறரிடம் கொடுமையுடன் குற்றங்காண்டல், மற்றவரினும் தான் மேல் எனும் அகங்காரமல்லது மேன்மைபாராட்டல், வழக்கில் ஓரஞ்சொல்லல், பொறாமைகொள்ளல், தன் குற்றம் பாராதிருத்தல், பிறரிடம் கொடுமை பாராட்டல் இத்துற்குணங்களை யறவே நீக்கிக்கொள்ளுங்கள். அதனால் உங்களுக்கு, பேச்சுக்கும் நினைவுக்கு மெட்டாத பரமசாந்தி யொன்று லபித்து, உலகிற்கு நன்மை பயக்கும் மகா சக்தியும் உங்களுக்கு வாய்த்து விடும். இவ்வழியால் எத்தீமையையும் ஆபத்தையும், சந்தோஷத்துடன் தாங்கிக்கொள்ளும் வல்லமையுடைய ஈசுவர பதவியையும் நீங்கள் அடைவீர்கள். அப்படியே ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் இந்த மகாசபையை அர்ப்பணமாக ஸ்தாபித்து, ஆரம்பிக்கப்பட்ட உத்தமகுணமாகிய சகோதரபாவமெனும் பெரும்பிரசாரப்பிரயத்தினமானது நிறைவேறுங்காலமும் நெருங்கும். ஆதலின் நண்பர்களே, உத்தேசிக்கப்பட்ட முடிவைநோக்கி மிகத்துணிவுடன் விரைந்தெழுமின். இதற்குக்குறுக்கிடும் இடையூறுகளை நினைந்து மனமடையாதீர்கள். மத்தியில் அபஜயம் நேர்ந்திடினும் மேற்சென்றால் ஜயமே வாய்க்குமெனும் நம்பிக்கையை யிழக்காதீர்கள். நாங்கள் உங்

கண்மீது நம்பிக்கை கொண்டிருப்பதுபோல் நீங்களும் முடிவில் இப்பெருங்காரியத்தில் ஜயம் அடைந்து வருவீர்கள் எனும் நம்பிக்கையை உங்களிடத்திலேயேகொண்டு துணிதல் வேண்டும். ஏனெனில் எங்களோடு பூர்வகாலத்திய சம்பந்தமொன்றுமில்லாதவரும் எங்களுக்குச் சொற்பவுதவியைக் கூடச் செய்துகொடுக்க முடியாத ஒரு மெம்பராவது இப்பிரமஞான மகாசபையிற் கிடையாது. ஆகலின் எங்கட்கு உதவிசெய்யத் தகுதியுள்ளவர் என்றே உங்களில் ஒவ்வொருவரையும் நாங்கள் தெரிந்து எடுத்திருக்கிறோமென்பதுண்மையல்லவா? உங்களுக்குள்ளும் ஒருவரால் மற்றவர்க்கு சஹாயம் அவசியம் செய்யமுடியும், உங்களத்தனைபேர்களும் எங்களுக்குத்தேவை. ஆகவே சத்தியம், நட்பு அல்லது சோதர பாவம் இவ்விரண்டிற்குமாக மிகத்துணிவுடன் முன் வாருங்கள். அவ்விதம் எங்களுக்குதவிபுரிவீர்களாயின் இனி வரும் பலகாலங்கட்கும் உங்களைக் கைவிடாது கட்டிக்காத்து உங்களுடன்கூட நின்றுழைத்துவருவோமென்பது சத்தியம்.

தமிழ் மொழிபெயர்ப்பு. P. R. சுந்தரராஜமய்யர்.

---

## மரணம்.

### 298—வது பக்கத் தொடர்ச்சி.

இப்படி இந்திரிய பிராணன்களை ஒருங்கு சேர்ப்பதில் தேகத்திற்கு சொல்லமுடியாத ஹிம்சையாயிருக்கும்—சாவகாசமாய் மரணமடைந்தாலும் திடீரென்று மரணமடைந்தாலும் இந்த அவஸ்தைபட்டுத்தான் தீரவேண்டும். ஜீவன்முக்தர்களும் புண்ணிய புருஷர்களும் இந்த அவஸ்தை கடவுள் அனுக்ரகத்தால் அதிகமாகப் படுகிறதில்லை யென்றும் சொல்லப்படுகிறது.

சிலேத்துமம் கட்டி இழுப்பது என்பது சுவாசகோசவியாதி ஏற்பட்டால் மாத்திரம் நீடித்திருக்கும். புத்ர மித்ர களத்திராதிகள் இந்தச்சமயத்தில் மரிப்பவனைப்பார்த்து, அவர் எவ்வுலகம் போகிறாரோ—அவர் கர்மம் எவ்வித முள்ளதோ, எக்கர்மபலனை யனுபவிப்பாரோ, கடவுள் அவருக்கு துக்க நிவர்த்தி செய்யட்டுமென்று பலவாறாக பிரார்த்திப்பதை விட்டு ஆஸ்தி எங்கே வைத்திருக்கிறாய்—யாரிடம் கொடுத்திருக்கிறாய்—இனி எனக்கென்னகதி—எனக்கென்ன கதி—எப்படிப்பிழைப்போம் என்று பலவிதம் எண்ணிக் கொண்டு தங்களுக்கு நேர்ந்த இன்பக்குறைவுகளை முன் னிட்டு பிரலாபிப்பதைப் பார்க்கிறோம்.



பிரதிதினமும் ஜீவர்கள் இறக்கின்றதைக்கண்டு கொண்டேயிருக்கும் ஜனங்கள் அம்மரணமுண்டென்று எண்ணி சற்காரியங்களைச் செய்யாமல் தங்களை சாசுவதமாய் எண்ணுகிறார்களே, இதைவிட ஆச்சரியம் யாதுளது என்று தர்மபுத்திரர் கூறியிருக்கிறார்.

ஜீவன் ஸ்தூலதேகத்தை விட்டவுடன் அதிருசியமான ஒருவித ஸ்தூலம் கிடைப்பதாகவும், அதைப்பற்றிக்கொண்டு தனது அனுபவங்களுடன் லோகாந்தரம் போவதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கே இரண்டாவதான உத்கிராந்தியவஸ்தை என்பது பகவற்கீதையில், இந்த ஸ்தூலத்திலிருக்கும் மனதை ஆறாவதாய்க்கொண்ட இந்திரியங்களை இழுத்துக்கொள்ளுகிறான். மற்றொரு சரீரத்தை யடைந்தாலும் லோகாந்திரப் பிரயாணத்தில் இந்திரிய பிராணமனங்களோடு கூடியே, வாயு புஷ்பங்களின் வாஸனையைப்பற்றி போவதுபோல், போகிறான்—என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பரலோகம் போகும் ஜீவனை அவன் செய்திருந்த உபாஸனையும் புண்ணிய பாபகர்மமும் பூர்வம் அடுத்தடுத்து செய்த பழக்கத்தினால் ஏற்பட்ட சுபா சுபகாரிய விஷய போகங்களுக்குத் தக்கபடி ஊன்றியுள்ள வாஸனைகளும் நன்கு பற்றி கூடவே செல்லுகின்றன என்று பிருஹதாரண்யாதி சுருதிகள் சொல்லுகின்றன.

மரணம் எதற்கு – ஸ்தூலம்-பிராணமயகோசம்-காமமானசிக சரீரங்கள்தான் மரணமடைகின்றன. பிராணமயகோ

சம் ஸ்தூலம் பூர்த்தியாய் அழிந்துபோனவுடன் மரணமடைகின்றது. அதாவது அன்னமயகோசமும் பிராணமயகோசமும் மனோமயகோசமும் மரணமடைகிறது—விஞ்ஞானமய கோசமும் ஆனந்தமயகோசமும் சேஷித்திருக்கின்றன.

3 மரணம் ஏன், ஒரு தலையாரி கிராமமுன்சீப்பின் கீழே நற்குண நற்செய்கையுடனிருந்து புகழ்ப்பெற்று சிறிய போலீஸ் உத்தியோகஸ்தனாய் பிறகு அக்குணங்களை விருத்தி செய்து தெய்வபக்தியுடன் மேன்மையடைந்து ஹெட்கன்ஸ்டேபிள்—ஸப்இன்ஸ்பெக்டர்- இன்ஸ்பெக்டர்—மாஜிஸ்டேரேட்—தாசில்-டிபிட்டி கலெக்டர்-கலெக்டர்-கவர்னர்—வைசுராய்-இராஜா—சக்ரவர்த்தியாய் எப்படி சம்பூரண ஸ்திதியடைகிறானோ அதுபோல் ஜீவன் ஜன்மங்கள்தோறும் ஜீவகாருண்யத்துடன் நற்கர்மங்களை நிஷ்காமமயமாய் செய்துகொண்டு எல்லா ஜீவர்களிலும் கடவுள் இருப்பதாகக்கண்டு கடவுளிடத்திலும் அவர் ஜீவகோடிகளிடத்திலும் இடைவிடா பேரன்பு பூண்டு உழைத்துவந்தால் படிப்படியாய் பூரண நிலைக்குவருவான்—இதற்குத்தான் மரணம். இதில் ஏன் பயப்படவேண்டும்-இது கடவுளின் கருணை-ஜீவகோடிகள் தாங்கள் கர்மத்தை அனுபவித்துத் தீர்த்து நற்கதியடையவேண்டுமென்றும் கடவுளன்பும்——கருணையுமாம் துஷ்கர்மபலன்——தாழ்த்தப்படுவதும், தண்டனைகளும்-மிச்ரகர்மத்திற்கு மிச்ரபலன் என்றுணர்ந்து நாம் மனிதராய் ஜனித்திருப்பது பூர்வ புண்ணியமென்றெண்ணி நற்செய்கை நற்குணங்களுடன் கடவுளிடத்து பக்தியும் அன்பும் பாராட்டி யாவரையும் சமமாக எண்ணி அவர்களிடத்தும் அன்புசெலுத்தி நிராசையுடையோராய் முடிவில் பூரணதிசையடைய பிரயத்தினம் செய்யவேண்டியதே நமது கடமை.

V. S. அருணாசலம் பிள்ளை.

---

# *மஹான் பிதகோராஸ் என்பவர் சரித்திரமும் உபதேசமும்.

பிதகோராஸ் என்னும் பெரியோன்றன் சீடர்களுக்கிது உபதேசங்களையும் ஈந்திட்டார்—அது எதெனில்

எக்கொடுமை யேற்றெந்தயாதிரியாலும் அறு நீ
தாக்கனியாதியைத் தூலதேகம் நின்—றக்கிரமச்

சதிகளினின்றே நகரைச்சாருயிர் நின்றஞ்ஞானம்
கொதிபசிகளின்று பல கூறுருசி—கதமதனைக்

காணவிடேல் வீடுகளில் கண்டிப்பா யெப்பொழுதும்
மாணதிலா மட்டின்மை யெல்லாநின்—றேயொழி நீ

என்றேயருளியெல்லா இளைஞர்களையும் கற்கை
நன்றேயென நவின்று நாடென்றார்—புன்றேகம்

போய்விடுமே காலத்தில் புத்தியுறு ஞானமதோ
ஆயுதவும் அப்புறமும் அவ்வுலகும்—தெய்வதுரு

தேபெருகிப் பூரிக்கும் தேடியளிக்குந்தோறுமே
சிறுகாதே செல்வம்போலென்று—காட்டியவர்

கற்கையினாலே மனிதர், நாகரிகர், தத்துவிகள்
விற்பனமதாய் வித்தியாச முறும்—அற்புதமாய்

முறையே விலங்கு அசடு, மூர்க்கர்களுள்ளின்றென்
றறையும் அருளாலாற்றி-

ஆதியந்தமில் பொன்னை அடையவே சொர்க்கமெனும்
வேதிகையில் மண்ணையுருக்கு. 1.

ஈசுரத்வ மார்க்கத்தில் ஏற்றமதாயே போக
மாசில் மனமே பெறுவையே. 2.

தியானமது விகசத்தில் தாவியோடுதல் சாவைத்
தானமிர்தத்திற் பிரித்துமே. 3.

உள்வெளியிலுள்ளவைகள் ஒன்றெதிரொன் றாயமைக
தெள்ளியனைத் தேறுதலின் முன். 4.

மனதை யொழுங்காக்கிடினே யல்லாமல் மன்னிறைவன்
கனகவடி சாரல் முடியா. 5.

---

* 1925-ம் வருஷம் ஜூலை மாதத்திய தியாஸபிஸ்ட் என்ற பத்திரிகையினின்றும் மொழிபெயர்த்தது.

எப்பொழுதும் உள்முகமே இதயமுகம் கடவுள் முகம்
செப்பதிலேயே தேர்கதே. (தே—கடவுள்) 6.

உள்வாழ்க்கை உள்ளிழுக்கும் சக்தியுடைத்தே யதனால்
தள்ளுதல்வோம் ஊழ்பூமியில். 7.

வெளிவாழ்க்கையோ விரிக்கும் சக்தியுடைத்ததலினால்
விமலனை விட்டோர்க்கு மெய்யே. 8.

சுகமதனை யனுபவிக்கத் வந்தவா நீதன்தானே
இகமதனில் ஏற்றவனுவன்.! 9.

தியாகமெனவேமிகவும் நிர்ந்த உயர்பதமாம்
யோகமுறை யுள்வாழ்க்கையுள். 10.

ஆசைகளை விட்டிடுவதற்குக் கருந்தபடி
பாசமறுபாதை யெளிதாம். 11.

இந்திரிய சொற்கொடுமை யலைத்தால் நீயும்
வெந்துயருதவாம் முடவனுள். 12.

மன்னெறிவெறும் ஊனெனுமிக்காலை படைத்திடு மேனா
தன்னலமென்றுதான் விடுவாய். 13.

சுறிலா அன்பறிவாம் சுறிலாச் சிவனைக்கண்
டோம்பீன உயிர்க்கூடியதாம். 14.

சௌலப்யம் சுத்தமிவைரண்டும் இருசிறகாம்
கோலவருடீக பறக்கவே.

சௌலப்யம் ஏகத்வம் சொல்லுமிரும் ஸாதிபமும்
ஏலவனன் பேசுதற்காம். 16.

எண்ணமுள பக்தியதும் பக்தியுள எண்ணமதும்
நண்ணிடவே வேண்டுமெவரும். 17.

நிஜதல நின்னிதயமதில் உள்ளதால் நீதினமும்
பஜிகாலை யாத்திரை யேகி. 18.

மறைமா முடிசேர்ந்து மன்னிறைவனை யனாக
இறும் உலக பாசமுடிகள். 19.

மறைமா முடியென்றால் மன்னுசத், சித், தின்ப
நிறைவென்று நீ நினைப்பையே. 20.

(The last i-e., 20 is not the translation, but original.)

☞ K. S. RAMASAWMY IYER.

## குறிப்புகளும் ஸமாச்சாரங்களும்.

சென்ற மேமீ 9உ முதல் 17உ முடிய கொடைக்கானலில், திவான்பஹதூர் ஸர், டி, ஸதாசிவய்யர் அவர்களின் அழைப்புக்கிணங்கி இத்தென்னாட்டிலுள்ள பிரம்மஞான ஸபை இ. எஸ். மெம்பர்கள் 26 பேர் வந்து சேர்ந்து அவர்து ஜாகையில் ஏக குடும்பம்போல் வசித்தார்கள். அதிரமணியமான இயற்கை வனப்புகள் நிறைந்த இந்தக்குன்றில் இந்த ஸகோதரக்கூட்டத்தார், பிரம்மஸ்ரீ டி. இராமச்சந்திரராயர் அவர்கள் ஸர். டி. ஸதாசிவய்யர் அவர்கள்போன்ற ஜேஷ்ட ஸகோதரர்களைத் துணையாகக்கொண்டு, பிரதிதினமும் தியானம் உயர்ந்த சம்பாஷணைகள், மீட்டிங்குகள் முதலியவைகளுடன் வெகு மனோச்சாஸத்துடனும் ஆன்மாபிவிர்த்தியுடனும் காலம் கழித்தனர். இம்மாதிரி ஏற்பாட்டினால் நாம் அடையும் பயன், பல ஞானசாஸ்திரங்களைப் படிப்பதனால் ஏற்படும் பிரயோஜனத்தை விட அதிகமன்றோ!

* * * *

இம்மாதிரி கூட்டம் மற்றொன்று மைஸூரில் கிருஷ்ணராஜஸாகரம் என்ற இடத்தில் சென்ற மேமீ 20உ முதல் 22உ முடிய நிகழ்ந்தது. ஸ்ரீமான் வி. ஜினராஜதாஸர் அவர்கள் தமது தர்மபத்னி ஸகிதம் அதற்கு விஜயம் செய்திருந்தனர். சுமார் 42 மெம்பர்கள் விஜயம் செய்திருந்தனர். அங்கு 23உ 24உ களில் கர்நாடக பீடரேஷன் பிரமஞான ஸபை மஹாநாடு ஸ்ரீமான் வி. ஜினராஜதாஸர் அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாய் நடைபெற்றது.

* * * *

டாக்டர் அன்னிபெஸண்டு அம்மையார் ஆகாய விமானத்தில் ஏறி ஹாலண்டு தேசத்திற்கு இப்பொழுது விஜயம் செய்திருப்பதாய் ஓர் பத்திரிகைவாயிலாக அறிகிறோம்.

---

## பத்திரிகை வரவு.

தொழிற்கல்வி என்ற பெயருடன் திருவட்மருதூரில் மெக்கானிக்கல் இஞ்ஜினீர் ம-ள-ள-ஸ்ரீ A. இராமஸ்வாமி அய்யர் அவர்களால் ஓர் சிறந்த மாதாந்தரப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு அதன்முதல் இதழ்வரப்பெற்றோம். நம் நாட்டுக்கு அத்யாவசியமான தொழிலபிவிருத்திமுறையைப் பற்றிய அநேக அரியவிஷயங்கள் இதில் வெளிவருவதால் தேசாபிமானம் நிறைந்த யாவரும் இதை ஆர்வத்துடன் வரவேற்று ஆதரிப்பார்களென நம்புகிறோம். இதன் வருஷ சந்தா, ரூ-4. உயர்ந்த காகிதத்தில் அழகாய் அநேக படங்களுடன் வெளிவருகின்றது.



தான் புண்ணிய பூமி; நமது பிராமண ஜன்மம் தான் ஜன்மம்; நமது வேதங்கள் தான் வேதம்; என்பது பலர் நினைப்பு. ஆகையால் அவதார புருஷர் பிறந்தால் நம் தேசத்தில் தான் பிறக்கவேண்டும்; நமது குலத்தில்தான் பிறக்கவேண்டும்; என்று நினைக்கிறார்கள். ஆயினும் சரித்திர பூர்வமாக, அவர் எத்தனையோ காலங்களில் எத்தனையோ தேசங்களில் பிறந்திருக்கிறார்கள் 'திக்காலாத்ய நவச்சின்னா:' (தேசகால வரம்பிற்குட்படாதவர்) என்று பர்த்ருஹரி கூறியிருக்கிறார். நாமெல்லோரும் அவரை தேசகால வரம்பிற்குட்படுத்தியே பார்க்கிறோம். ஹிந்துக்கள் அவர் எப்படியிருப்பர் என்று நினைக்கிறார்கள்? காஷாயம் தரித்துக்கொண்டு யானை குதிரை பல்லக்கு முதலிய விருதுகளுடன் வருவார் என்று நினைக்கிறார்கள். மஹம்மதியர்கள் ஒருவிதமாகவும், கிறிஸ்தவர்கள் வேறுவிதமாகவும் நினைக்கிறார்கள். அவர் ஸந்யாஸியாயிருப்பர் என்று பலர் எண்ணுகிறார்கள். வேறு சிலர் கிருஹஸ்தராயிருப்பரென்று எண்ணுகிறார்கள். இன்னும் சிலர் அவர் பிரஹ்மசாரியாயிருப்பரென்றெண்ணுவார்கள். சிலர் அவரைப் பிரபுவாயிருப்பரென்று எண்ணலாம். வேறு சிலர் அவரை ஏழையென்று எண்ணலாம். அவர் எல்லா நிலைமைகளிலும் அவதரிக்கக்கூடும். இவர் இன்று வருவாரோ, இப்போது வருவாரோ, இனி எப்போது வருவாரோ, எப்படியிருப்பாரோ, என்ற எண்ணத்தோடு எங்கெங்கே அழகும், அன்பும், ஞானமும், நன்மையும், மேன்மையும், விளங்குகின்றனவோ, அங்கெல்லாம் அவரை நாம் எதிர்பார்க்கவேண்டும். அவர் வெள்ளைக்காரர்களுக்குள் அவதரிக்கக்கூடாதென்று நிர்ப்பந்திப்பவர் உண்டோ? ஸ்திரீ சரீரத்தில் அவர் ஆவிர்ப்பவிக்கக்கூடாது என்று அவரைத்தடுப்பவர் உளரோ! அவர்க்கு ஜாதி, வித்தை, குல, தன, யௌவனம், தொழில் இவைபற்றிய பேதம் உண்டோ! எல்லா தேசங்களிலும் எல்லா பாஷைகளிலும் பெரியோர் மநங்களில் எண்ணங்களை உதிக்கச்செய்து சாஸ்திரங்களை வெளியிட்டு மதங்களை ஸ்தாபித்த பரமாசார்யனே நேரில் வந்து "இதுதான் அர்த்தம்" என்று சொல்வாரானாலும், நமது சாஸ்திரிகள் அவரை எதிர்

த்து, அவரை ஜாதி பிரஷ்டம் செய்யத் தயாராயிருக்கிறார்கள். ஒவ்வொரு அவதார காலத்திலும் குருட்டு நம்பிக்கையுடைய சாஸ்திரிகளும் அவர்களைப் பின்பற்றும் விவேகமற்ற பஹுஜனங்களும், ஆத்மஞானமில்லாததால் குருட்டுத்தனமடைந்த அரசர்களும் அவதார புருஷனுக்கு நேர் எதிர்க்கட்சியில் நிற்பார்கள். பணிவும், தாழ்மையும், பரிசுத்த ஹிருதயமுமே தற்காலத்தில் அவசியமாயிருக்கின்றன. இதுதான் நமது எண்ணங்களிலுள்ள அஹம்பாவத்தை ஒழித்தல்.

இரண்டாவது, நம்முடைய கண்யதை, அந்தஸ்து, மதிப்பு முதலியன. அத்தகைய மஹாபுருஷர்கள் ஸகல விஷயங்களையும் ஞானக்கண்ணால் வாசிப்பார்கள். நாம் ஊனக்கண்ணால் பார்ப்போம். ஆகையால் அவர்கள் பார்வைக்கும் நம்பார்வைக்கும் வித்தியாஸமுண்டு. இவர் அவதார புருஷர்தான் என்று தெரிந்துகொண்டபோதிலும், அவருடன் ஒத்து உழைக்கவேண்டுவதற்கு மெத்தவும் தைரியம் வேண்டும். ஏனெனில் உலகினரிற் பெரும்பான்மையர் அவரை ஒரு மஹா குருவெனத் தெரிந்துகொள்வதே துர்லபம். ஆதலால் பெரும்பான்மையர் நமக்கு எதிர்கட்சியில் நிற்பார்கள். நம்மை ஏளனம் செய்வார்கள். தவிரவும் "இதுதான் பாதை" என்று அவர் நமக்குக் காட்டும்போது, அதில் போகும் தைரியம்வேண்டும். ஏனெனில் நம்மால்தான் அவர் காரியங்களும் நடக்கும். ஆனால் நாம் அவருடன் ஒத்துழைக்காவிடினும் அவர் ஸ்வயமாகவே நடத்தும் வன்மையுடையவர். நமக்கு எத்தனையோ வேலைகள் கொடுத்தவண்ணமாக இருப்பர். நம்மிடமுள்ள தவறுகள் எத்தனையோ, அத்தனையையும் காண்பிப்பார். லஜ்ஜையினாலும், டம்பத்தினாலும், அவரை விட்டு நீங்கலாகாது. இன்னவேலை செய்யலாம்; இது கௌரவக்குறைச்சல் என்ற அற்ப எண்ணங்கள் நமக்கு இருத்தலாகாது. பேதபுத்தியையுடைய நமக்கும், அபேத புத்தியினர்களாகிய மஹாபுருஷர்க்கும் இவ்வளவு வித்யாஸம் உள்ளது.



மூன்றாவது, நமது உடைமைகளையும், சொத்து ஸ்வதந்திரங்களையும் தியாகம் செய்யவேண்டிவரும். தற்காலத்தில் பணமில்லாமல் நமக்கு எக்காரியமும் முடியாது. அநேகர் மேற்கூறிய இரண்டுவித தியாகங்களையும் செய்யத் தயாராயிருப்பினும், இதைமட்டும் செய்யக் கூசுவார்கள். மனிதர்கள் தம் ஆத்மாவைக்காட்டிலும் பணத்தையே அதிகமாக மதிக்கிறார்கள். "அவ்வளவையும் கொடு" என்று அவர் கேட்கும்போது, "சிறிது மட்டும் எனக்கு வைத்துக்கொள்கிறேன்" என்று சொல்வோமானால் நமது அஹம்பாவம் உதிரவில்லையென்பது நிச்சயம்.

மேற்கூறிய மூன்று விதங்களிலும் "நான்" என்ற தனி எண்ணத்தை நசிக்கச் செய்வார்கள் மிகவும் அபூர்வம். சிற்சிலர் ஏதாவதோர் வகையான தியாகம் மட்டும் செய்யத் தயாராயிருப்பர். ஆனால் அது கோபிகைகளின் பக்திக்கு ஈடல்ல. ஏனெனில் அவர்கள் பகவானே சரணம் என்று அவரை நாடினர்.

ஆனால் தியாகம் என்னும் சுபாவம் ஓரே நாளில் திடீரென்று உதிக்காது. இப்போது முதலே அதை ஒவ்வொரு சிறு காரியத்திலும், ஒவ்வொரு நினைவிலும், சிறுகச் சிறுகச் சேகரிக்கவேண்டும். தியாகம் என்னும் ஜ்வாலையில் நம் தினசரி ஆசாரணை ஒவ்வொன்றையும் ஈசுவரநாமாவைச் சொல்லி ஆஹுதி செய்யவேண்டும். நாம் பிறரோடு பேசும்போது பிறர் அபிப்பிராயங்களை உதாஸீனப்படுத்தாமலும், வேலை செய்வதில் இழிவு, தாழ்வென்று எண்ணாமல் பிறர்க்கு உபகரித்தும், நம் பணம் காசுகளையும் தியாகம் செய்தும் வருவோமானால், நாளடைவில் அது நம்மிடம் வளரும். பின் அவதார புருஷரைச் சமீபிக்க அருஹராவோம்.

வரப்போகின்றவர் அன்பே உருக்கொண்ட மைத்ரேய பகவானாகையால், உலகெங்கும் அன்புமயமாக மாறவேண்டும். எந்த ரூபத்தைப் பார்த்தாலும், அதன் அழகு மனிதர்க்கு ஆனந்தத்தை விளைவிக்கத்தக்கதாயிருக்கவேண்டும்.

ஒவ்வொரு மனிதனும், ஸ்திரீயும், குழந்தையும் அன்பின் சுடர்களாக விளங்கவேண்டும். நாம் எவ்வளவுக் கெவ்வளவு நம்மையும் உலகத்தையும் அன்பின் முறையில் சாதகப்படுத்துகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவுதான் பரமாசாரியன் வருகையால் பயன்பெறுவோம்.

கோபிகைகளைப்போல நிஷ்களங்கமான ஹிருதயங்கள்தான் பகவானைக் கண்டுகொள்ளக்கூடும். ஊனக்கண் பார்வையால் நிச்சயிக்கமுடியாத விஷயம் இது. நல்ல ஸித்தியால் விளைந்த திவ்யதிருஷ்டியால் தான் கண்டுகொள்ளல் சாத்தியம்.

22. தத்ராபி ந மாஹாத்ம்யஜ்ஞானவிஸ்ம்ருத்யபவாத:।

**கோபிகைகள் அன்புசெலுத்தியதில் கண்ணன் மஹாத்மா என்பதை மறந்ததாக அபவாதம் சொல்லக்கூடாது.**

குறிப்பு:—பெரியோர்களின் பெருமையை யறிவதற்கு, பெருமை என்பது ஒரு சிறு திவலையாவது நம்மிடத்திலிருந்தால் ஒழியச், சாத்தியமில்லை. சாந்தம், பக்தி, ஸ்தைர்யம் இம்மூன்று குணங்களையும் நம் தினசரி நடபடிக்கைகளில் பிரதான அம்சங்களாக அமைத்துக்கொள்வதோடு, பிறரிடமுள்ள குற்றங்களைப் பொருட்படுத்தாது குணங்களைக்கொள்வதே பெரியோர்களைத் தெரிந்துகொள்ளும் வழி. இந்த நாளில் மஹாத்மாக்களைத் தெரிந்துகொள்ள சூசகமான சில விஷயங்கள் உள்ளன. அவைகள் நம்மால் மறக்கற்பாலன வல்ல. இக்காளில் ரயில், தந்தி, தபால் முதலிய போக்குவரவு சாதனங்களால், விஸ்தாரமாயிருந்த உலகம் சுருங்கிவிட்டது என்னலாம். மஹாத்மாக்கள் வழிபடவேண்டுமென்பது உலக முழுமையும் ஓர் பொது நோக்கமாகிவிட்டது. உதாரணமாக, டாக்டர் ரவீந்திர நாதர் இந்தியரானாலும் அவருடைய பிரகியாதி மேல் நாடுகளெங்கும் விளங்குகிறது. மாதுஸ்ரீ பெஸண்ட் அம்மாள், அயர்லாந்து தேசத்தவரானாலும், நம் இந்தியர்கள் அவரை எப்படி மதிக்கிறார்களென்பது நமக்குத் தெரிந்தவிஷயம். எப்படி மலையுச்சி விளக்கின் பிரகாசம் மறைக்கப்படாதோ, அப்படியே ஓர் மஹாபுருஷன் உலகின் எந்தபாகத்தில் தோன்றினபோதிலும் அவருடைய பெயர் தற்காலத்தில் விளங்காமற்போகாது. அவருடைய உபதேசங்களும் உலக முழுமைக்கும் பயன்தரக்கூடியதாயிருக்கும். அற்பமாயிரா. ஏனெனில்



பரோபகார வ்யஸநீ மஹாத்மாபிதீயதே।

பரோபகாரத்திலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவரை மஹாத்மா வென்னலாம். உதாரணமாக ஸ்ரீ பெஸண்ட் அம்மாளை மஹாத்மாவென்று சொல்வதில் என்ன தடை? டாக்டர் டாகூர் அவர்கள் தமக்குப் பரிசுகிடைத்த ரூ. 1,20000 வை அப்படியே தமது பள்ளிக்கூடத்திற்கு அர்ப்பணம் செய்தனரன்றோ. இத்தகையாரல்லவோ ஜகத்குரு அவதரிக்கப்போகிறார் என்று பிரகடனம் செய்கிறார்கள். இவர்களையே நாம் அவதார புருஷர்களாக மதிக்கவேண்டியிருக்கிறது. ஆனால் இவர்கள் தம்மினும் மேலான ஒருவர் வருவாரென்று எதிர்பார்க்கிறார்கள். இத்தகைய பெரியாரை நாம் எவ்வளவுக்கெவ்வளவு நன்கு மதித்து, வணக்கமுற்று, அவர்கள் சொல்லும் வழியில் ஒத்து உழைப்போமோ, அவ்வளவுக்கவ்வளவுதான் அவதார புருஷரிடத்தில் நாம் நேர்மையாய் நடந்துகொள்வோம்.

முனிகளுக்குள் சிரேஷ்டருடைய லக்ஷணத்தைப்பற்றி பூரணஸரஸ்வதி என்னும் யதியொருவர் அடியில்வருமாறு ஸ்ரீ விஷ்ணு பாதாதிகேசாந்த ஸ்தோத்திரத்தில் 40 – வது சுலோகத்தில் எழுதுகிறார்.

முநீந்த்ரா: — திவ்யசக்ஷு: ஸம்பந்நதயா முநீநாம் ச்ரேஷ்டா: பரமஹம்ஸாதய: ॥ மௌநாந்முநி:, ந சாரண்யவாஸான்முநி:, அக்ஷரம் தத்த்வம் யோ வேத ஸ முநிச்ரேஷ்ட உச்யதே ॥

ஆரண்யவாசம் மட்டும் முனிகளின் லக்ஷணமல்ல. ஆனால் திவ்ய திருஷ்டியும், மௌநமும், பரப்பிரஹ்ம நிஷ்

டையுமே முனிகளின் லக்ஷணம் என்றும் தெரியவருகிறது. இவை மூன்றும் நமது பெஸண்ட் அம்மையாருக்கு உண்டென்பதையும் பலர் அறிவர்.

திவ்ய திருஷ்டியால் அவர் ஸூக்ஷ்மதத்துவங்களை மிகத்தெளிவாய் அநேக புஸ்தகங்களின் மூலமாய் வெளிப்படுத்தியிருக்கிறார். ஸூக்ஷ்மலோகங்களின் தன்மையையும், மனிதனின் ஸூக்ஷ்ம சரீரங்களின் தன்மையையும், காரண சரீரங்களின் தன்மையையும், மஹாத்மாக்களின் காரணசரீரங்களின் தன்மையையும், எண்ணங்களின் ரூபங்களையும் சித்ரப்படங்களைக்கொண்டு நன்கு உதாஹரித்திருக்கிறார். அப்புஸ்தகங்களைப் பார்ப்போர்கள் யாவரும் இரண்டு விதமாய் நினைக்கக்கூடும். அவர் திவ்ய திருஷ்டிபெற்றவர் என்று நினைக்கலாம். அல்லது அபாரமான கல்பநா சக்திவாய்ந்தவர் என்று நினைக்கலாம். எப்படியாயினும் அவர் நம்மினும் பெரியார்தான். "பிரகிருதிப்பொருள் எதையும் சிறுபடுத்திக் கொண்டேபோனால், அணு என்னும் பரிமாணமடைந்தவுடன் அதை சேதிக்கமுடியாது. அத்தகைய அணுக்களால்தான் உலகம் அமைந்திருக்கிறது" என்பது பௌதிக சாஸ்திரிகளின் சித்தாந்தம். அந்த அணுவுக்குள் அணுவொன்று உள்ளது. அது சக்தி ரூபமாயுள்ளது. அது இவ்வாறு இயங்குகிறது என்பதைச் சித்திரித்தும் வர்ணித்தும் இருக்கிறார். அம்மையார் குப்த சாஸ்திரத்தில் தேர்ச்சியுடையவர் என்பது உலகப்பிரசித்தம். அம்மையார் தமது பிரக்ஞையைத் துரீய, துரீயாதீத லோகங்கள் வரை செலுத்தக்கூடியவர். அங்ஙனம்செய்தே, மநுஷ்யவர்க்கம் தற்காலஸ்திதிக்கு எத்தனை படிகளைத் தாண்டி வந்திருக்கிறது என்பதைப்பற்றி விரிவான ஓர் சரித்திரம் எழுதியுள்ளார். அதாவது 10 லக்ஷக்கணக்கான வருஷங்களுக்கு முன் மனிதவர்க்கம் இருந்த நிலைமைகளெல்லாம் அதில் விவரிக்கப்பெற்றுள்ளன. அதோடு வருங்கால சம்பவங்களையும் சூசிப்பித்திருக்கிறார்.

மனிதர்களைப் பெரியாரின் பாதங்களிற் சேர்ப்பிக்கவென்றே பிரஹ்மஞான மஹாசங்கத்தை அவர் நடத்திவரு



கிறார். அந்த சங்கம் எவ்வளவுதூரம் பயன்படுகிறதென்று பார்ப்போம். புஷ்பம்தோறும் தேனையே நாடிச் செல்லும் வண்டுபோல, பிரதிஜீவனிடத்திலும் என்னென்ன நற்குணங்கள் உள்ளன என்பதைமட்டும் கிரகிக்க அச்சபை ஓர் சாதகமாயிருக்கிறது. ஆகையால் அச் சபையின் காரியங்கள் நேர்மையாய் நடக்கின்றன. அத்ருஷ்டாவிஹஸ்தியே । என்று சொல்லப்பட்ட பிரகாரம் மறைவாக சஞ்சரிக்கும் மஹரிஷிகளின் தரிசனம் துர்லபமேயானாலும் எவரெவர்கள் அவர்களுக்குச் சிஷ்யர்களாயிருப்பதற்குத் தம்மைத் தாமே அர்ப்பணம் செய்துகொள்கிறார்களோ, அவர்கள் மூலமாக வெல்லாம் குருநாதர்களின் பிரகாசம் வெளிவருகிறது. ஸங்கீதத்தை அப்பியஸிக்கும் ஒருவன் எப்படி திடீரென்று ராகம் பாட முடியாதோ, வரிசைகிரமமாய் ஸ்வராவளிகளை ஒன்றொன்றாய் அப்பியசிக்காதவரை ஞானம் ஏற்படாதோ, அப்படியே குருநாதர்களுக்கும் நமக்கும் இடையிலுள்ள எண்ணிறைந்த சிஷ்யர்களிடத்தெல்லாம் குருநாதருடைய பிரகாசத்தைப் பார்த்திருந்தாலல்லாமல் நாம் குருநாதர்களை தரிசிக்க இயலோம். வருங்காலத்தில் உற்பவிக்கும் அவதார புருஷரை மஹாத்மாவெனத் தெரிந்து நல்வரவேற்க விரும்புவோர் யாவரும் பிரஹ்மஞானஸபையில் சேருவது நலம். ஏனெனில் இப்போது நம் கண்முன்னே மாஹாத்மியத்தோடு விளங்கும் ஓர் பெரிய ஞானஸபையை அலக்ஷியம் செய்வோமானால், அவதாரபுருஷரின் பாரம்யத்தை மறந்தவராவோம். இவ்வுலகத்து இயங்கும் எந்த மஹிமையும் அவரின்றி இயங்காது. நாம் இவ்வுலகத்திற் சிற்சில ஜனங்களுக்கு மத்தியில் பிறப்பது எதற்காக? வீடு கட்டும் கொத்தன் ஒருவன் ஒவ்வொரு கல்லையும் தன் கையாலெடுத்து வைத்து எப்படிக் கட்டடத்தை உயர்த்துகிறானோ, அங்ஙனமே நாம் பழகும் பெண்டு, பிள்ளை, தாய், தகப்பனார், அண்ணன், தம்பி, பந்து, மித்திரர்கள், ஆசிரியன், இன்னும் மற்றையோர்களையும் பார்த்துப்பார்த்து ஒவ்வொரு நற்குணமாகக் கிரஹித்து நம் ஆத்மாவைப் பரிபூர்த்திசெய்யக்கடவோம். வீடு வாசல்களும், ஆலயங்களும், சத்திரம் சாவடிகளும், தொழிற்சாலை

களும், ஆஸ்பத்திரிகளும், வித்தியாசாலைகளும் அன்புடன் மனிதர் பழகுவதற்கு எற்ற அவகாசங்கொடுப்பனவாயிருந்தாலல்லாமல் அவை பயனற்றவை. வித்யாசாலைகளை நடத்த வேண்டிய முறையில், அன்பைப் பிரதான அம்சமாக அமைக்கவேண்டும். குழந்தைகளைப்பற்றி நாம் கொள்ளும் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். அவர்கள் ஆத்மாக்கள் என்ற எண்ணம் வந்தாலொழிய நாம் விபரீதநிருஷ்டியுள்ளவர்களாயிருக்கிறோம். கல்வி என்பது பிள்ளைகளைத் தடிகொண்டடித்துப் பழுக்கவைப்பதல்ல; தன் தன் ஆத்ம சக்திகளை தானே மலர்த்திக்கொள்வதற்குச் சிறிது ஸாதகமாயிருக்கவேண்டியதுதான் உபாத்தியாயர் தொழில். ஒவ்வொரு குழந்தையும் ஒரு ரோஜாபுஷ்பக் கன்று என்று வைத்துக் கொள்வோம். தன்னிடத்தில் அழகான ஓர் புஷ்பத்தை மலரச்செய்யும் சக்தி அதற்கிருப்பினும், நாம் தண்ணீர் ஊற்றவேண்டிய அவசியம் மாதிரியே, பிள்ளைகளின் ஆத்ம சக்திகள் மலருவதற்கும், நமது அன்பைத் தாராளமாக ஊற்ற வேண்டும். அமெரிக்க துரை ஒருவரும், அமெரிக்க மாது இன்னொருவரும் முறையே ஓரோர் பூந்தோட்டத்தை வளர்த்து வந்தார்கள். இருவரும் சாஸ்திரமுறைப்படியே வளர்த்து வந்தார்கள். ஆயினும் அம்மாது சிரோமணிவளர்த்து வந்த தோட்டத்தின் சோபை, தன்னத்தைக் காட்டிலும் அதிகமாயிருந்ததுகண்டு துரை ஆச்சிரியமுற்று, அப்பெண்மணியைப் பார்த்து ரகசியம் என்னவென்று கேட்கவே, “நீங்கள் உங்கள் செடிகளுக்குத் தண்ணீரைமட்டும் ஊற்றினீர்கள். நான் ஒவ்வொரு செடிக்கும் என் ஹிருதய பூர்வமான அன்பையும் தண்ணீரோடு சேர்த்து ஊற்றினேன்” என்றாள். புல், பூண்டுகளும் செடிகொடிகளும், மலைநதிகளும், ஆரண்யங்களும், எல்லாம் சைதந்யத்தின் ஓரோர் விளக்கமேயாம் என்பது இங்கிலீஷ்கள் மநப்பூர்வமாய் உணரவேண்டிய உண்மை. நாம் கை ... மாறு கருதாமல் அவைகளிடத்தும் நமது அன்பைச் செலுத்தினாலும் அவை நமக்குப் பிரத்தியுபகாரமும் செய்யும் என்பது சாகுந்தலத்தின் ஓர் சுலோகத்தால் விளங்கும். சகுந்தலை ஒவ்வொரு பூச்செடியையும், படர்கொடியையும், மான்


ஸ்ரீமத் பகவத்கீதை.

இந்த சுலோகமும் தமிழ் மொழிபெயர்ப்பும். எம்மதசம்பந்தமின்றி ஸர்வமத சம்மதமாயும் மூலகிரந்தத்தை அனுசரித்ததாயுமுள்ளது. பிரம்மவித்தியா மஹாஸபையின் தலைவரான டாக்டர் அன்னிபெஸண்டு அம்மாள் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பை அனுசரித்து. ஏனங்குடி ஸ்ரீமான் V. இராமச்சந்திர நாயுடு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. காலிகோ பைண்டுசெய்த பாக்கெட் ஸைஸ் விலை அணா 9. இன்னும் பிரம்மஞானத் தமிழ்புஸ்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாஸத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சாந்திவிலாச புஸ்தகசாலை,
எடமணல், (சீர்காழி வழி).

# கலர் சேலைகள், பனியன்கள் ரப்பர் ஸ்டாம்பு & இங்குகள்.

இப்பவும் எங்களிடம் அடியில்கண்டபடி கலர் சேலைகள், ரவிக்கைகள், தாவணிகள், சித்து அல்லது சித்தாடைகளும், சேலம் பனியன்கள் 1 முதல் 9 குவாலிட்டி வரையிலும் 18 முதல் 40 இஞ்சு வரையிலும் நல்ல தினுசுகளாகவும் விலை நயமாகவும் (ரப்பர் ஸ்டாம்பு), ரப்பர் ஸ்டாம்பு இங்குகள் ஸ்பெஷலாகவும் புளூபிளாக், ரெட்டிங்க், பச்சை, பிரஸ் இங்குகளும். வெகு நாணயமாகவும் ஸ்பெஷலாகவும் தயார் செய்து வருகிறோம். கமிஷன் யேஜண்டுகள் தேவை. லெட்டர் எழுதினால் சாம்பிளும் விலை விபர லிஸ்டும் அனுப்புகிறோம்.

(1) கலர் சேலைகள் சாயம் காரண்டி. சாயம் போனால் மறுபடி இனமாய் சாயம் போட்டுக் கொடுப்பதுடன் அனுப்பும் செலவுக்கும் ஸ்டாம்பும் வைத்து அனுப்பிவிடுகிறோம். சாயம்போன உருப்படிகளை மருசாயம் போடவேணுமானால் வாங்கின தேதி முதல் ஒரு மாதத்திற்குள் அனுப்பிவிடவேண்டியது. டயம் கடந்து அனுப்பினாலும் எங்கள் சீல் இல்லாததை அனுப்பினாலும் நாங்கள் ஜவாப்தாரியல்ல. ஒரு சேலைக்கு ஆர்டர் செய்தால் பூரா பணமும் ரிஜிஸ்டர் பாக்கிங் செலவு அணா 0-10-0 சேர்த்து அனுப்பிவிட்டால் உ... M. O. கமிஷன் 0-2-0 லாபப்படுகிறது. ஒன்றுக்கு ... சேலைகளுக்கு ஆர்டர் செய்தால் அட்வான்ஸ் ... கு அனுப்பிவிட வேண்டியது. ஆர்டரில் கலர் ... ம் இவ்வளவு இஞ்சு) ரயில்வே பார்ஸல் ... ர்சல் விபரமும் அட்ரஸ் விபரமு... டியது. இதர ஜவுளிகளும் ... க்கும்.

...ன் or கெம்பு, புளு or நீலம். ...தா, ரோஸ், சிமிட்டு, காக்கி

இராஞ்சு ஒவைத்தி சல்லவெ மல்லிலும் பச்சை பட்டும் 20 × 20, 18 × 18 காரிககன் மல்லிலும் தயாராகிறது. எங்கள் சேலைகளில் எங்கள் வீதும் போடப்பட்டிருக்கும். மேற்படி சேலைகளுக்கு முந்தி அருகு ஒன்றுமில்லாமல் ஒரே பிளெயின்தான். ஆகை யால் முந்தி அருகு தேவையுள்ளவர்களுக்கு முந்தி (டைமன் கலர் பட்டினால்) பூபோட்டும் அருகு கொடிபோட்டும் அனுப்பி அதற்கு சேலை 1-க்கு ரூ. 1-8-0 ஸ்பெஷலாய் சார்ஜ்செய்யப்படும்.

44 இஞ்சு 9 கெஜம் சேலை 1-க்கு ரூபா 6-4-0.

50 இஞ்சு 9½ கெஜம் சேலை 1-க்கு ரூ. 7-12-0.

44 இஞ்சு கெஜம் ரவிக்கை 1-க்கு ரூபா 0-5-6.

50 இஞ்சு ½ கெஜம் ரவிக்கை 1-க்கு ரூபா 0-6-6.

மற்ற ரகங்களும் எவர் எவர்களுக்கு எவ்வளவுகெஜத்தில் தேவை யோ அவைகளை எழுதினால் விலை விபரமும் சாம்பிளும் அனுப் பப்படும். கலர் இமிடேஷன் பட்டு சேலைகளும் 7 ரூபாய் முதல் 20 ரூபாய் வரையில் கிடைக்கும்.

| V. P. சார்ஜ் பிரத்தியேகம். | | பாக்கிங். | போஸ்ட். | ஆக. |
|---|---|---|---|---|
| 1 | சேலைக்கு உத்தேசம் | 0-2-0. | 0-8-0 | 0-10-0. |
| 2 | ,, ,, | 0-4-0. | 0-11-0. | 0-15-0. |
| 3 | ,, ,, | 0-5-0. | 0-14-0. | 1-3-0. |
| 4 | ,, ,, | 0-7-0. | 1-1-0. | 1-8-0. |

இதற்கு மேற்பட்டால் ரயில்வே பார்சல்தான் செலவு சுருவாய் முடியும். வியாபாரிகளுக்கும் கமிஷன்யேஜண்டுகளுக்கும் ஒரே தடவையில் 5 சேலைக்கு மேற்பட்டு ஆர்டர் செய்கிறவர்களுக் கும் விலையில் சல்லீஸ் செய்து அனுப்பப்படும்.

(2) பனியன்களுக்கு ஆர்டர் செய்தால் குவாலிட்டி நெம்பரும் இஞ்சு விபரமும் சரியான அட்ரஸ் போஸ்ட் or ரயில்வேபார்சல் விபரமும் யெழுதி 4-ல் 1 பங்கு அட்வான்ஸ் அனுப்பவேண்டி யது. மற்றவைகள் லெட்டர்மூலமாய் யெழுதி தெரிந்துகொள்ள லாம். ரப்பர் ஸ்டாம்பு, இங்கு வகையராக்கள் லெட்டர் மூலமாய் விலைகள் தெரிந்துகொள்ளலாம்,

1½ கெஜம் நீளமுள்ள இமிடேஷன் சில்க் மப்ளர் டெஜன் 1க்கு ரூபா 15-0-0. சலவை பனியன்களுக்கு டஜன் 1-க்கு சலவை கூலி 0-4-0 சேர்த்து வசூல் செய்யப்படும்.

மேல்கண்ட சாமான்கள் திருவல்லிக்கேணி அச்சர் வியாபா ரம் K. V. சாஸ்திரிகளிடமும் கிடைக்கும்.

**O. V. ...laswamy Iyer,**

*Cloth Merc... ...Commission Agent,*

*...Chetty Street.*

...AS.

ஒ. வெ. ...

ஜவுளி வியாபா...